# ஐக்கிய அமெரிக்க தூதரகம்
# கொழும்பு
## ஊடக அறிக்கை

பொது அலுவல்கள் பிரிவு
தொ.பே: +94 (11) 249-8100 ● பெக்ஸ்: +94 (11) 244-9070
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20200409

**அமெரிக்காவின் உதவி இலங்கையின் சுகாதார பணியாளர்களை பாதுகாக்கும் என்பதுடன், COVID-19 கண்காணிப்பு மற்றும் பரிசோதனையை மேம்படுத்தும்**

**கொழும்பு, ஏப்ரல் 9:** சுகாதார பணியாளர்களை பாதுகாக்க உதவுவதற்கும் தொற்றுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு உதவியுடன் இந்த வைரஸ் பரவலை தணிப்பதற்கும் அமெரிக்க அரசாங்கமானது சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) ஊடாக 1.3 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க உறுதிபூண்டுள்ளது.

"பங்காளர்கள் மற்றும் நண்பர்கள் என்ற வகையில் மிகவும் கடினமான நேரங்களிலும் கூட அமெரிக்கர்களும் இலங்கையர்களும் ஒருவருக்கொருவர் உதவுகின்றனர்," என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்தார். "இந்த உலகளாவிய தொற்று நோய்க்கு மத்தியிலும் கூட மீளெழுச்சியைக் கொண்ட எமது நீடித்த உறவை இந்த நன்கொடை பிரதிபலிக்கிறது. கடந்த காலத்தைப் போன்றே, COVID-19 ஐ எதிர்த்து போராடுவதற்காக இலங்கைக்கு உதவ முக்கியமான உதவியை வழங்குவதில் நாம் பெருமை படுகிறோம்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொற்றுள்ளவர்களை கண்டறிதல் மற்றும் நிகழ்வு அடிப்படையிலான கண்காணிப்பு, பதிலளிப்பு மற்றும் தயார்நிலைக்கான தொழில்நுட்ப நிபுணத்துவம், அபாய தொடர்பாடல், தொற்றுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, மற்றும் மேலும் பலவற்றை செயல்படுத்துவதற்கு இந்த நிதியளிப்பு இலங்கைக்கு உதவியளிக்கும். மேலும், பெரியளவிலான COVID-19 சோதனைகளின் நிமித்தம் இலங்கையின் ஆய்வுகூட முறைமைகளை ஆயத்தப்படுத்த அமெரிக்கா உதவும். உதவிக்கான கூடுதல் முன்னுரிமை பகுதிகளை கண்டறியும் நிமித்தம் இலங்கை அரசாங்கம் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் அமெரிக்கா ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சுகாதாரம் மற்றும் பேரனர்த்தம் சம்பந்தமான நெருக்கடி நேரங்களின் பேதெல்லாம் இலங்கையர்கள் ஆரோக்கியமாகவும் மீளெழுச்சித்திறன் கொண்டவர்களாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக 60 வருடங்களுக்கு மேலாக அமெரிக்கா பணியாற்றியுள்ளது. இந்த உதவிகளானது மலேரியா தொற்றை இல்லாதொழிக்க உதவியுள்ளதுடன், டெங்கு தொற்றின் போது அதிநவீன உபகரணங்களின் ஊடாக ஆயிரங்கணக்கான உயிர்களையும் காப்பாற்றியுள்ளது. அதுமட்டுமல்லாது, தனிநபர்கள் அவர்களது எச்.ஐ.வி. நிலையை அறிந்து கொள்வதற்கும் அதேபோல், எச்.ஐ.வி. சார்ந்த ஏனைய புத்தாக்கங்களிற்கும் இவை உதவியுள்ளன.

பொது சுகாதார துறையில் உலகின் மிகப்பெரிய இருதரப்பு உதவி வழங்குனராக அமெரிக்கா இருந்து வருகிறது. வரிசெலுத்தும் அமெரிக்க மக்கள் தாராள மனப்பான்மையுடன் 2009 ஆம் ஆண்டிலிருந்து 100 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான சுகாதார உதவிகளையும், உலகளவில் கிட்டத்தட்ட 70 பில்லியன் டொலர் மனிதாபிமான உதவிகளையும் கிடைக்கச் செய்துள்ளனர். இந்த பெருந்தன்மையானது முக்கியமான பல பல்தரப்பு பங்காளர்களுக்கான எமது பங்களிப்புகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் பின்வருவனவும் உள்ளடங்குகின்றன:

- 2019 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்புக்கான (WHO) அமெரிக்காவின் பங்களிப்புகள் 400 மில்லியன் டொலரிலும் அதிகமாகும். இது இரண்டாவது மிகப்பெரிய பங்களிப்பை வழங்கிய உறுப்பு நாட்டினது பங்களிப்பின் சுமார் இரு மடங்காகும்.
- ஐ.நா. அகதிகள் முகவரமைப்புக்கான (UNHCR) சுமார் 1.7 பில்லியன் டொலர் அமெரிக்க உதவி 2019 ஆம் ஆண்டில் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது. அகதிகள் சனத்தொகையினர் COVID-19 தொற்றுக்கு விசேடமாக பாதிக்கப்படக் கூடியவர்கள் என்ற வகையில், முன்னோக்கி செல்வதற்கு இந்த உதவி முக்கியமானதாக இருக்கும்.
- 2019 ஆம் ஆண்டில் ஐ.நா. சிறுவர் நிதியத்துக்கு (UNICEF) அமெரிக்கா மொத்தமாக 700 மில்லியன் டொலருக்கும் அதிகமான பங்களிப்புகளை செய்துள்ளது. இந்த ஆபத்தமான நோய்க்கிருமிக்கு எதிராக நாம் போராடி வருகிறோம் என்ற வகையில், நோய்த்தடுப்பு பிசாரங்கள் மற்றும் சுகாதார மற்றும் ஆரோக்கிய மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் உதவிகள் என UNICEF இனால் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் வாழ்க்கைப் பாதுகாப்பு நடவடிக்கைகளானது உயிர்களை பாதுகாக்கும்.

எங்காவது ஓரிடத்தில் காணப்படக்கூடிய தொற்றுநோய் அச்சுறுத்தலொன்றானது எல்லா இடங்களுக்குமான அச்சுறுத்தலொன்றாக உருவெடுக்கலாம் என்பதனால் COVID-19 ஐ எதிர்த்து போராடுவதற்கான உலகளாவிய முயற்சிக்கு பங்களிப்பு செய்யுமாறு ஏனைய நன்கொடையாளர்களையும் அமெரிக்கா வலியுறுத்துகிறது.